1984 மார்ச் 29]

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற கடனில் மானியம் உண்டா? மானியம் ஏதும் இருக்கின்றது என்றால் இந்த 7,500 ரூபாய் வரை கொடுக்கப்படுகின்ற கடனில் எவ்வளவு தொகை மானியமாகக் கொடுக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்தக் கடனில் மானியம் இல்லை.

(முற்பகல் 9-40)

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறத்திலுள்ள நிலமற்ற ஏழை, எளிய விவசாயிகள் தாங்கள் பயிர் செய்த நிலங்களை அபிவிருத்தி செய்ய நிலவள வங்கிகள் கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்த நிலவள வங்கிகளை, பயிர் செய்கிற நிலமற்ற விவசாயிகள் அணுகுகிற நேரத்தில், அந்த நிலத்தை அவர்கள்தான் பயிர் செய்கிறார்கள் என்று சொல்லி குத்தகைப் பதிவு செய்திருந்ததற்கு அத்தாட்சி கேட்கப்படுகிறது. அத்தகைய அத்தாட்சி பெற முடியாத நிலைமையில், அந்த வசதியைப் பெற முடியாத நிலைமையில் இருக்கிறார்களே, அரசு அதற்குண்டான முறையில் வருவாய் துறை அதிகாரியின் அத்தாட்சியை வைத்து, அந்த நிலத்தைப் பயிர் செய்கிறாரா என்று கண்டறிந்து அவர்களுக்கு உதவி செய்வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவிதமான சான்றிதழும் இல்லாமல் கடன் வழங்குவது இயலாத ஒன்றாகும். அதிகாரிகளிடத்தில் வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் ஆகியோர்களிடத்திலே சான்றிதழ் அல்லது அவர்கள் சம்பந்தப்பட்ட வி. ஏ. ஓ.க்களிடத்தில் சான்றிதழ் பெற்றுக் கொடுத்துப் பின்னால்தான், அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் நிலத்தை உழுபவர்கள் என்கிற சான்றிதழ் பெற்றால்தான் கடன் வழங்க முடியும். அந்த முறைதான் நடைமுறையிலே இருக்கிறது.

சத்துணவு திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள கிராமங்களின் எண்ணிக்கை.

505 —(*வினா எண் 13850) —திரு. செ. செம்மலை: மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்துணவுத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் எத்தனை கிராமங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன ?

(ஆ) அதற்காகச் செலவிடப்படும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) சிறப்புச் சத்துணவுத் திட்டம் மற்றும் திருத்தப்பட்ட சத்துணவுத் திட்டம் ஆகிய திட்டங்கள் நிறுத்தப்பட்டு அவைகள் முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்துடன் 15-9-1982-லிருந்து இணைக்கப்பட்டுவிட்டன. சேலம் மாவட்டத்தில் 1,616 கிராமங்கள் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு 1,616 மையங்கள் இயங்கி வருகின்றன. இது தவிர சேலம் மாவட்டத்தில் நகர்ப் புறங்களில் 247 சத்துணவு மையங்களும் இயங்கி வருகின்றன.

(ஆ) இதற்கென ஆகும் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,12,36,827 ஆகும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் கூடுதலான சத்துணவு மையங்கள் வருகிற ஆண்டில் தேவைப்படும் என்கிற கோரிக்கை வந்திருக்கிறதா? அப்படி அதைப் பரிசீலித்துக் கூடுதலாகச் சத்துணவு மையங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 70 குழந்தைகளுக்குக் குறையாத அளவுக்கு இருக்கிற இடங்களில் இதற்கு முன் சத்துணவு மையங்கள் வைக்கப்படவில்லை என்பது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் நமது சத்துணவு மையக் கூடங்கள் நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சத்துணவு திட்டத்திற்கு தினசரி செலவாகும் அரிசி மற்றும் பருப்பின் அளவு.

506 —(*வினா எண். 16535) —திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்திற்குத் தினசரி ஆகும் அரிசி, பருப்பு அளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு தோராயமாக ஒரு நாளைக்கு 607 டன் அரிசியும், 84 டன் பருப்பும் செலவாகிற.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஒதுக்கப்படுகின்ற இந்த அரிசி, பருப்பு, முழுமையாகக் குழந்தைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு இருக்கக் கூடிய அமைப்பு என்ன? இப்பொழுது கண்காணிப்பதற்கு அதிகாரிகளை மட்டும் நம்பி இராமல் அங்கே இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளுடைய பிர